**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 39/2020**

| | | DEPOSITION OF WITNESS | DW.1 |
|---|---|---|---|
| NAME | முனிரத்தினம் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | ராஜா | RELIGION | இந்து |
| AGE | 69 | OCCUPATION | |
| VILLAGE | புவனேஷ்வரிபேட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 20.11.2025.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் அரசு ஊழியராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். லதா 7 பேர் மீது வழக்குபோட்டுள்ள நிலையில் நான் வழக்கை நான் தனியாக நடத்துகிறேனா அல்லது 7 பேருக்காகவும் நடத்துகிறேனா என்றால் 7 பேருக்காகவும் நடத்துகிறேன். இந்த வழக்கில் பதிலுரையை யார் போட்டது என்றால் நான் தான் போட்டேன். பதிலுரையில் உள்ள சங்கதிகளை யார் சொல்லி போட்டார்கள் என்றால் நான் சொல்லி தான் போட்டார்கள்.

2. வழக்கு சொத்தின் சர்வே எண் 1156/3. அந்த சொத்து நஞ்சை நிலமா, புஞ்சை நிலமா என்று தெரியவில்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் தெரியாது. தாவா சொத்தின் நீள, அகலம் மற்றும் நான்கு பக்க செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. வாதி என்ன ஆவணம் போட்டுள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். சாட்சி தற்போது தெரியாது என்று சொல்கிறார். என்ன பதிலுரை தாக்கல் செய்து வழக்கு நடத்துகிறேன் என்றால் தாவா சொத்தில் எனக்கு ஆட்சேபனை இல்லை, காவாய் தண்ணீர் பிரச்சினை இல்லாமல் ஆற்றுக்கு போக வேண்டும்.

3. பஸ்வேஸ்வரா 3வது தோப்பு தெருவில் கதவு எண்.43, 44–ல் குடியிருக்கிறேன். என் வீடு மேற்குபக்க வாசப்படி. என் வீட்டிற்கு மேற்குபக்கம் வடக்கு தெற்காக ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த ரோடு நகராட்சியால் போடப்பட்டுள்ளது என்றாலும் என் வீட்டை ஒட்டி காவாய் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காவாயில் நாங்கள் தண்ணீர் விடுகிறோம் என்றால் தற்காலிகமாக விடுகிறோம். நான் வீடு கட்டியுள்ள இடத்தின் சர்வே எண்.1154/1. நான் கட்டிய வீடு அப்புரவல் ஆனதா என்றால் தெரியவில்லை. சாட்சி தற்போது அப்புருவல் ஆகாதது என சொல்கிறார்.

4. நான் யாரிடம் இருந்து சொத்து வாங்கினேன் என்றால் வெங்கைய்ய நாயுடுவிடம் இருந்து என் மனைவி பெயரில் வாங்கினேன் மற்றும் எனது அம்மாவிடம் இருந்து நான் வாங்கினேன். என் அம்மா யாரிடம் இருந்து வாங்கினார் என்றால் பெயர் தெரியாது ஒரு நாயுடுவிடம் இருந்து வாங்கினார். நான் வாங்கிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த இரண்டு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாங்கிய சொத்தின் செக்குபந்தி சொல்ல முடியுமா என்றால் பார்த்தால் தான் சொல்ல முடியும்.

5. சர்வே எண்.1154/1 சொத்திற்கான FMB தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, தாக்கல் செய்கிறேன். தாவா சொத்துக்கான பட்டா மற்றும் அ பதிவேடு ஆகியவற்றை வாதி தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி தனக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறக்கூடாது என வாதி வழக்கு போட்டுள்ளார் என்றாலும் தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

6. தவறான சங்கதிகளுடன் வாதிக்கு தொல்லை கொடுக்க வேண்டி பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தவறான சங்கதியோடு பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் தவறான சங்கதிகளோடு முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் சுவாதீனத்தில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. யார் சுவாதீனத்தில் தாவா சொத்து உள்ளது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகளை சாட்சியாக விசாரிக்கப்போகிறேனா என்றால் இல்லை. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் அத்துமீறி உரிமை கொண்டாடியதால் வாதி இந்த வழக்கை போட்டுள்ளார் என்றால் சரியல்ல. அதுபோல் நாங்கள் அத்துமீறி உரிமை கொண்டாடவில்லை என்றால் சரிதான், அதற்கான அவசியம் இல்லை.

K KARTHICK ASATH    Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியில் நீதிபதி,
குடியாத்தம்.